**3.6.2026**

பெயர் - பாப்பாத்தி

**O.S. No.100/2018 (P.W.1)**

(துவங்கப்படும் நேரம் - 1.00 PM)

(முடிக்கப்பட்ட நேரம் - 2.55 PM)

**1** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை **:-**

என்னுடைய அப்பாவின் பெயர் முகமது உசேன் என்று சொன்னால் சரிதான். நான் ஒரு முஸ்லீம் சமூகத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். நான் எப்போது கிருஸ்துவராக மதமாறினேன் என்றால் 1981 ம் வருடம் மாறினேன். அப்போது நான் முறையாக தேவாலையத்திற்கு சென்று ஞானஸ்தானம் பெற்று கிருஸ்துவராக மாறினேனா என்றால் ஆமாம். நான் இஸ்லாமியராக இருந்த போது எனது பெயர் என்ன என்றால் பாப்பாத்தி ஆகும். நான் கிருஸ்துவராக மதம் மாறி பின்னர் எனது பெயர் என்ன என்றால் மேரிபாப்பாத்தி ஆகும். இஸ்லாமிய சமூகத்தில் யாரும் பாப்பாத்தி என்று பெயர் வைக்கமாட்டார்கள் என்றும் இஸ்லாமியராக இருந்த போது எனது பெயர் சமுருனிசா என்று சொன்னால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் பள்ளிக்கு சென்றதே இல்லை. நான் கிருஸ்துவராக மதம் மாறியதை காட்டுவதற்கு ஏதேனும் ஆதாரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் இரசீதினை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முதல் கணவரின் பெயர் ஜோசப் ஸ்டான்லி என்றும் அவரை திருமணம் செய்தற்காக தான் நான் கிருஸ்துவ மதத்திற்கு மாறினேனா என்றால் ஆமாம். எனக்கு 3 மகன்கள் உள்ளனர் என்று சொன்னால் சரிதான். எனது 3 மகன்களுக்கும் நான் கிருஸ்துவ முறைபடி தான் திருமணம் செய்துவைத்தேன் என்று சொன்னால் சரிதான். என் முதல் கணவர் ஜோசப் ஸ்டான்லியை எப்போது விவாகரத்து செய்தேன் என்றால் 2005 ம் வருடம் விவாகரத்து செய்தேன். எனது மகன் ஆண்ரூஸ் தினேஷ் குமார் என்பவருக்கு 2016 வருடம் திருமணம் நடைபெற்றது என்று சொன்னால்சரிதான். அந்த திருமண பத்திரிக்கையில் ஜோசப் ஸ்டான்லியை எனது கணவராகவும் எனது பெயர் மேரி என்றும் குறிப்பிட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

அந்த பத்திரிக்கையை என் மகன் தான் அடித்துள்ளார் அதனால் அதில்நான் ஒன்றும் செய்ய இயலவில்லை. பத்திரிக்கை அடிக்கும் போது என்னிடம் கேட்காமல் அவர்கள் விருப்பத்திற்கு பத்திரிக்கையை அச்சிட்டார்களா என்றால் ஆமாம். எனக்கு விவாகரத்தாகி 2 வது திருமணம் செய்த பின்னரும் அதை மறைத்து எனது முதல் கணவர் பெயரை அச்சிட்டு எனது பெயரான மேரிபாப்பாத்தி யை மாற்றி மேரி என்று குறிப்பிட்டு எனது சம்மதத்துடன் தான் அந்த திருமண பத்திரிக்கை அச்சிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது முதல் கணவரான ஜோசப் ஸ்டான்லி உயிருடன் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். எங்களுக்குள் 2006 ல் விவாகரத்து ஆனபின்னரும் நாங்கள் ஒன்றாக தான் இருந்துவருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் திருமண பத்திரிக்கையில் அவரது பெயர் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என் மகன்களும் என் முதல் கணவரும் ஒன்றாக இருந்துவருகிறார்கள். அதனால் எனது விருப்பமின்றியே அவர்களாக பத்திரிக்கையை அச்சிட்டுவிட்டார்கள். நான் என் முதல் கணவர் மற்றும் என் மகன்களுடன் ஒன்றாக தான் இருந்துவருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமி என்பவர் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளின் தந்தை என்று சொன்னால் சரிதான். சின்னசாமி என்பவர் இந்து மதத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். நான் சின்னசாமியை திருமணம் செய்ததாக கூறியுள்ளநிலையில் எந்த தேதியில் எங்குவைத்து திருமணம் செய்தோம் என்றால் 10.3.2006 அன்று சின்னசாமியின் வீட்டின் அருகில் உள்ள பால்காவடி காட்டேரியம்மன் என்ற கோவிலில்வைத்து திருமணம் செய்தோம். இந்து முறைப்படி தான் நாங்கள் திருமணம் செய்தோமா என்றால் ஆமாம். எங்கள் திருமணத்தில் யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் அவரது அண்ணன் மற்றும் அவரது மனைவி, எனது பெற்றோர்கள், சின்னசாமியின் 2 மருமகள்கள் மற்றும் பேரபிள்கைளுடன் கலந்துகொண்டார்கள். திருமணத்தின் போது மந்திரம் சொல்லப்பட்டு முறைப்படி எங்கள் திருமணம் நடைபெற்றதா என்றால் இல்லை. பூசாரி யாரும் இருக்கவில்லை நாங்கள் சென்றோம் தாலி கட்டி வந்துவிட்டோம். நாங்கள் புகைப்படங்கள் எதும் எடுத்தோமா என்றால் இல்லை. எனக்கும் சின்னசாமிக்கும் இடையே உண்மையில் ஒரு திருமணம்

நடைபெற்றிருந்தால் நான் கோவிலில் திருமணம் செய்து கொண்டதை காட்டுவதற்கான இரசீதுகளையும், திருமண புகைப்படங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது 20.12.2006 அன்று சின்னசாமிக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு தேதி சரியாக நினைவில் இல்லை. உண்மையில் எங்கள் திருமணம் 10.3.2016 என்று நடைபெற்றிருந்தால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோதே அந்த தேதியை குறிப்பிட்டிருப்பேன் என்றும் அதைமாற்ற தற்போது மனு தாக்கல் செய்திருக்க மாட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. எங்களுடைய அப்பாவிற்கு சொந்தமான சொத்துகளை சின்னசாமி கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். எங்கள் திருணமத்தின் போது எனக்காக என் அப்பா கொடுத்த சொத்தினை நான் தான் சின்னசாமி பெயருக்கு கியைம் செய்ய கூறினேன். என் அப்பா சொத்தினை சின்னசாமி கிரையம் பெற்ற போது எனக்கும் அவருக்குமிடையே ஒரு தகாத உறவு ஏற்பட்டு நாங்கள் தொடர்பில் இருந்து வந்தோம் என்றும் எங்களுக்குள் திருமணம் எந்த காலத்திலும் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சின்னசாமியின் முதல் மனைவி இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் அவரது சொத்தினை அபகரிக்கும் நோக்கில்தான் நான் எனது முதல் கணவரை விவாகரத்து செய்து சின்னசாமியை திருமணம் செய்ய ஏற்பாடு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கூடலுாரில் தான் திருமணம் நடைபெற்றதாக நான் கூறியுள்ள நிலையில் அந்த திருமணத்தை நான் உதகையில் தான் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். சின்னசாமி உதகையில் வேலை செய்ததால் அங்கு பதிவு செய்தோம். எங்களுக்குள் திருமணம் நடைபெற்றதாக நாங்கள் கூறியதன் அடிப்படையில் தான் அந்த திருமணத்தை பதிவு செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும் சின்னசாமியும் தகாத உறவில் இருந்ததால் அதை பயன்படுத்தி அந்த விலாசத்தில் நான் வசிப்பதாக கூறி ஆதார் அடையாள அட்டையை பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எந்த காலத்திலும் நானும் சின்னசாமியும் கணவன் மனைவியாக வாழவில்லை என்று சொன்னால்

சரியல்ல. அந்த வீட்டில் நான் 10 வருட காலமாக வாழ்ந்துவந்தேன். வழக்கு சொத்து சின்னசாமிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அது அவர் சுயமாக சம்பாதித்த சொத்து ஆகும். அவர் 2005 வருட காலத்தில் என்ன வேலை செய்து வந்தார் என்றால் பாரஸ்டராக இருந்தார் பின்னர் ரேஞ்சர்ஆனார். சின்னசாமியின் முதல் மனைவியின் நகைகளையும் அவருக்கு திருச்சியில்இருந்த ஒரு சொத்தினையும் விற்பனை செய்து தான் தாவா சொத்துக்களை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமி ஆரம்ப காலத்தில் பாரஸ்ட் கார்டாக வேலைசெய்தார் என்றும் அப்போது அவருக்கு குறைந்த சம்பளம் தான் கிடைத்தது என்றும் அதை வைத்து அவரால் எந்த சொத்துக்களையும் வாங்க இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமியின் முதல் மனைவி மிகவும் ஏழைகுடும்பத்திலிருந்து வந்தவர் ஆவார். எனக்கும் சின்னசாமிக்கும் இந்து திருமணப்படி திருமணம் ஆகவில்லை என்றும் சட்டப்படி எங்கள் திருமணம் செல்லாது என்றும் அதனால் தாவா சொத்துக்கள் கிடைக்க நான் பாக்கியதை அற்றவர் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் சின்னசாமிக்கும் இருந்த தககாத உறவினை பயன்படுத்தி அவரது சொத்தினை அபகரிக்கும் நோக்கில் பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

(உணவு இடைவேலைக்காக குறுக்கு விசாரணை மதியம் 1.30 மணியளவில் ஒத்திவைக்கப்படுகிறது)

(உணவு இடைவேலை முடிந்து குறுக்கு விசாரணை மதியம் 2.15 மணிக்கு துவங்குகிறது)

3 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளான பழனிசாமி, ஹசினா ஹசன் மற்றும் சைனாப்பாய் ஆகியோர்களை எதற்காக இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் அவர்களுக்கு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் சின்னசாமியின் சொத்தினை ஒரு பொய்யான வாரிசுசான்றிதழினை பெற்று இவ்வழக்கு நடைபெற்றுவந்த சமயத்திலேயே எனக்கு தெரியாமலேயே விற்பனை செய்துவிட்டார்கள். ஈரோட்டில் இருந்த

சொத்துகளையும் உதகையில் இருந்த சொத்துக்களையும் விற்பனை செய்துவிட்டதாக நான் கூறுகிறேனா என்றால் பெருந்துறையில் இருந்த ஒரு சொத்தினையும் உதகையில் இருந்த 3 சொத்துக்களையும் விற்பனை செய்துவிட்டார்கள். அந்த சொத்துக்கள் யாருடைய சுவாதினத்தில் உள்ளது என்றால் வாங்கியவர்களின் சுவாதினத்தில் உள்ளது. கூடலூாரில் உள்ள சர்வே எண்.1244/4 ஏ ல் மூன்றேமுக்காள் விஸ்தீரணம் உள்ள வீடு கதவு எண்.4/195 என்ற சொத்தின் வாடகையை யார் வாங்கி வருகிறார்கள் என்றால் சின்னசாமியின் மூத்த மகன் வாங்கி வருகிறார். தற்போது தாவா சொத்தில் உள்ள எந்த சொத்தும் எனது சுவாதினத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். சின்னசாமியின் சொத்துக்களை எனது பங்கின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் ரூ. 1 கோடி இருக்கும். தாவா சொத்தின் சுவாதினம் என்னிடம் இல்லாத நிலையில் நான் சந்தை மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டும் என்றும் ரூ.5,000/- செலுத்தி வழக்கு தாக்கல் செய்தது நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 3, 4, 5 வது பிரதிவாதிகளை என்ன காரணத்திற்காக இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்று வழக்குறையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. கூடலூாரில் உள்ள அட்டவணை சொத்து - 8 செம்பாலாவில் உள்ள சொத்திற்கு பட்டா இல்லை என்று சொன்னால் சரிதான். அது பிரிவு 17 பூமியாகும். அந்தநிலம் அரசு நிலம் என்று சொன்னால் சரிதான். சின்னசாமியின் பெயரில் மேற்படி சொத்து இருந்தது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதில் உள்ள வீட்டின் வீட்டுவரி இரசீதினை கொடுத்துள்ளேன். 24 சென்ட்டிற்கு சின்னசாமிக்கு உரிமை உள்ளது என்பதை காட்டுவதற்கு இரசீதோ அல்லது குத்தகை ஒப்பந்தமோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 24 சென்ட்டிற்கு சின்னசாமிக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் பாப்புட்டி என்ற கேரளமாநிலத்தை சேர்ந்தவரிடம் இருந்து அந்த சொத்தினை வாங்கினார். அந்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமியின் மகன்கள் அதை எடுத்து சென்றுவிட்டார்கள். நான் வீட்டுவரி இரசீதினை தாக்கல்செய்துள்ளேன்.

சின்னசாமியின் மகன்கள் மேற்படி ஆவணங்களை எடுத்துசென்றுவிட்டார்கள் என்று நான் காவல் நிலையத்தில் புகார்அளித்தேனா என்றால் புகார் அளித்தேன், அதன் இரசீதினை இவ்வழக்கினில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது என் வசம் தான் உள்ளது. சின்னசாமியின் மகன்கள் சந்தோஷ்குமார் மற்றும் இரஞ்சித்குமார் அந்த ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார்கள் என்ற விவரத்தினை வழக்குறையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு வழக்கில் கூறாமல் தற்போது வழக்கிற்காக பின் யோசனையின் பேரில் அவ்வாறு குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 24 சென்ட் நிலம் அரசு நிலம் என்பதால் அரசினை இவ்வழக்கின் ஒரு தரப்பினராக சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. கூடலூார் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.45/2021 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாமல் ஒரு வாரிசு சான்றிதழை பெற்றுள்ளார்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 29.4.2026 அன்று கூடலூார் நீதிமன்றத்தில் எனது குறுக்கு விசாரணையில் என்னுடைய முஸ்லீம் பெயரை மாற்றி மேரி என்று பெயர் வைத்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் திருமணம் நடைபெற்றதாக சொல்லப்படும் கோவில் எங்கு உள்ளது என்றால் கூடலூாரில் ஓவிஎச் ரோடில் எங்கள் வீட்டின் அருகே உள்ளது. கூடலூாரில் எத்தணை வருடமாக இருக்கிறேன் என்றால் 10 வருடமாக இருக்கிறேன். கூடலூாரில் உள்ள நடைமுறைகள் எனக்கு 14 வயது முதல் தெரியும் என்று சொன்னால் சரிதான். கூடலூாரில் சக்திவிநாயகர் கோவில், மாரியம்மன் கோவில் மற்றும் முருகன் கோவில்உள்ளது என்றும் அங்கு தான் திருமணங்கள்நடைபெறும் என்றும் சொன்னால் என் கணவர் அவர் வீட்டின் அருகே உள்ள கோவிலுக்கு அழைத்து சென்று தாலி கட்டினார். கூடலூார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது எங்கள் திருமணத்தை எனக்கு தெரிந்த தனிநபர்கள் பார்க்கவில்லை என்றும் ரோட்டில் சென்றவர்கள் பார்த்தாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அது உண்மை என்று சொன்னால் சரிதான். 10.3.2006 அன்று ஒரு திருமணம் எனக்கு

நடைபெற்றதாக நான் கூறியுள்ள நிலையில் அதை நிரூபிக்க என்னால் இயலுமா என்றால் என் அம்மா அப்பா இறந்துவிட்டார் என் கணவரும் இறந்துவிட்டார். கடவுள் தான் நிரூபிக்க முடியும். நான் கிருஸ்துவராக மாறியதை கெசட்டில் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஜோசப் ஸ்டான்லிக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ததை அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று சொன்னால் சரிதான். சின்னசாமியின் சொத்தை அடையவேண்டும் என்ற நோக்கத்தில் நாங்கள் திட்டம் தீட்டி தான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் அதனால் தான் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமியின் வீடான 1/319 என்ற வீட்டில் நான் 10 வருடம் வசித்தேன் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல எனது ஆதார் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன். ஆதார் அடையாள அட்டையை எப்போது நான் வாங்கினேன் என்றால் எங்கள் திருமணத்திற்கு பின்னர் என் கணவர் தான் முறைப்படி எனது விலாசத்தை அவரது விலாசத்திற்கு மாற்றினார். அசல் வழக்கு எண்.45/2001 என்ற வழக்கின் சாட்சியத்தில் என் கணவர் இறந்த பின்னர் திருமண சான்றிதழை காண்பித்து ஆதார் அடையாள அட்டையில் உள்ள விலாசத்தினை என் கணவரின் விலாசத்திற்கு மாற்றியதாகவும் வாரிசு சான்றிதழ் பெற்றதாகவும் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுளள அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் 2005 ம் வருடத்திற்கு முன்பாக வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2002 வருடம் முதல்2005 வரை வாங்கப்பட்டுள்ளது. எனக்கு திருமணம் ஆனதாக நான் குறிப்பிட்டுள்ளது 2006 என்றும் எங்கள் திருமணத்திற்கு முன்பாகவே அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளதால் அந்த சொத்துக்கள் வாங்கிய விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் சொல்லி தெரிந்துகொண்டேன். என் கணவர் என்னிடம் எந்த விவரத்தையும் தெரிவிக்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக மேற்படி சங்கதிகளை பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சின்னசாமி எப்போது பணி ஓய்வுபெற்றார் என்றால் சரியாக நினைவில் இல்லை. 2002, 2005

வருடத்தில் சின்னசாமி பணியில் தான் இருந்தார் என்று சொன்னால் சரிதான்.சின்னசாமியின் முதல் மனைவியின் பெயர் சரோஜா என்று சொன்னால் சரிதான். அவர் 2002 ம் வருடம் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். பணியில் இருக்கும் போது அவர் தான் வேலை செய்யும் துறையில் அனுமதி பெற்றுதான் சொத்துக்களை வாங்க முடியும் என்றும் சின்னசாமி அனுமதி பெறும் போது தனதுமுதல் மனைவியின் சொத்துகளை விற்பனை செய்து தாவா சொத்துக்களை வாங்குவதாக குறிப்பிட்டுதான் அனுமதி பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் சின்னசாமிக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும் நடைபெறாத திருமணத்தை பதிவு செய்துள்ளதால் அது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. இந்து முறைபடி திருமணம் செய்ய சில சடங்கு சம்பிதாயங்களை செய்யவேண்டும் என்றும் அவ்வாறு செய்யப்படாமல் இருந்தால் அந்த திருமணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் திருமணத்தில் கலந்துகொண்ட நபர்கள் தற்போது உயிருடன் இருக்கிறார்களா என்றால் என் பெற்றோர்கள் இல்லை. அவர்கள் குடும்பத்தில் யார் உயிருடன் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. சின்னசாமியின் மருமகள்கள் மற்றும் பேரகுழந்தைகள் இருக்கிறார்கள்.